**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF II ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

SC.No. 419 of 2022

Deposition of witness for

PW1(LW1)

Name : Saravanan

Father's Name : Velayudam

Age : 38 Years

Address : No.5, Sharma Nagar, 7th Street, Vyasarpadi,

Chennai 31.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21st day January of 2026 .

---

21.01.2026

சாட்சி சத்யபிரமாணம் செய்யப்பட்டார்

PW1 முதல் விசாரணை

நான் நம்பர் 5, சர்மா நகர், ஏழாவது தெரு, வியாசர்பாடி, சென்னை 31 என்ற விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 07.09.2022 அன்று மாலை சுமார் 4 மணியளவில் எனக்கு ஒரு போன் கால் வந்தது. நான் பர்மா பஜாரில் செல்போன் வியாபாரம் செய்யும் கடை வைத்து நடத்தி வருகின்றேன். எனக்கு கிடைக்கப்பெற்ற அழைப்பில் செம்பியம் காவல் நிலையத்தில் இருந்து அழைப்பு வந்தது பிபி ரோடு சுடுகாடு அருகில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் ஒரு பிரேதம் இருப்பதாகவும் அதனுடைய பாக்கெட்டில் இருந்த கைபேசி எடுத்து பார்த்த பொழுது பிரதர் என்ற பெயரில் என்னுடைய அலைபேசி எண் இருந்ததாகவும் அதன் மூலமாகவே தன்னை அழைத்ததாகவும் மேலும் அலைபேசி எண்ணை ஆய்வு செய்து பார்த்த பொழுது மேற்படி எண்ணின் உரிமையாளர் பெயர் கார்த்திக் என்று வந்ததாகவும் அவர் யார் என்று கேட்டு

என்னிடம் போலீசார் விசாரணை செய்தார்கள் என்னையும் உடனடியாக பிபி ரோடு சுடுகாட்டிற்கு வரும்படி சொன்னார்கள் நான் கடையிலிருந்து அங்கு சென்று சேர்வதற்குள் மாலை 5.45 மணி ஆகிவிட்டது. அங்கு சென்ற நான் கார்த்திக் என்னுடைய நான்காவது தம்பி என்று சொன்னேன். நான் சென்று பார்த்த பொழுது பிபி ரோடு சுடுகாடு பக்கத்தில் போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர் உள்ளே சென்று பார்த்த பொழுது ஒரு பகுதியில் வட்ட வடிவத்தில் ஒரே ரத்தமாகவும் தலையில் இருந்த மூளை கண் போன்ற பகுதியில் அனைத்தும் அங்கும் இங்குமாக சிதறி காணப்பட்டது என்னுடைய தம்பியின் உடல் எங்கே என்று கேட்ட பொழுது அங்கே சிதறி இருந்த பொருட்களுடன் அவருடைய உடலையும் கேஎம்சி அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கில் வைத்திருப்பதாகவும் அங்கு வந்து அடையாளம் காட்ட சொன்னார்கள். நான் உடனடியாக கேஎம்சி அரசு மருத்துவமனைக்கு என்னுடைய இருசக்கர வாகனத்தில் செல்ல எனக்கு துணையாக இரண்டு காவலர்கள் மற்றொரு இரு சக்கர வாகனத்தில் என்னுடன் வந்தார்கள் அங்கு சென்று பார்த்த பொழுது அங்கிருந்த உடல் என்னுடைய தம்பினுடைய உடல் என்று அடையாளம் காட்டினேன். மேற்படி பிரேதத்தை பார்த்து நான் அழுது கொண்டிருந்த பொழுது போலீசார் எப்படி இதுபோல நடந்திருக்கும் என்று கேட்டார்கள் நானும் செல்வதாக அவர்களிடம் சொன்னேன். இந்த சம்பவம் நடந்து ஐந்து அல்லது ஆறு மாதத்திற்கு முன்பு என்னுடைய அம்மாவிற்கு சொந்தமான வீடு ஒன்று விவி காலனி, நாலாவது தெருவில் உள்ளது கதவு இலக்கம் 214 இல் உள்ளது அந்த வீட்டில் என்னுடைய சித்தி மட்டுமே குடியிருந்து வருகிறார்கள். என்னுடைய அம்மா எப்பொழுதாவது மேற்படி இடத்திற்குச் சென்று என்னுடைய சித்தியுடன் தங்கி விட்டு வருவார்கள். மேற்படி வீடு என்னுடைய அம்மாவின் அம்மாவிற்கு சொந்தமான வீடு. அது போல ஒரு நாள் இரவு என்னுடைய அம்மா என்னுடைய சித்தியுடன் தங்குவதற்காக சென்ற பொழுது மாதவன் அப்பா காட்டான் அவர்கள் அவருடன் சேர்ந்து இரண்டு நபர்கள் எங்கள் வீட்டு வாசலிலேயே உட்கார்ந்து மது அருந்தி கொண்டிருந்ததாகவும் அங்கு சென்ற என்னுடைய தாயார் உள்ளே செல்வதற்கு வழியில்லாமல் உட்கார்ந்து இருப்பதால் தள்ளி அமர சொல்லி கேட்டதாகவும் அவர்கள் என்னுடைய அம்மாவை உருட்டு கட்டையால் வலது கை முழுவதும் தாக்க கை முழுதும் சிவந்துவிட்டது என்றும் என்னுடைய அம்மா கைபேசி மூலமாக எனக்கு தகவல் கொடுக்க என்னுடைய அக்கா ரேவதி என்பவர் என்னுடைய பாட்டி வீடான பிவி காலனிக்கு சென்று என்னுடைய அம்மாவை அடிபட்டு இருந்தால் என்னுடைய அம்மாவை அங்கிருந்து அழைத்துக் கொண்டு ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும் அப்பொழுது நேரம் பகல் சுமார் 1.30 அல்லது 1.45 இருக்கும் என்றும் என்னுடைய அம்மாவிற்கு கையில் பலமான காயங்கள் எதுவும் இல்லை என்று சொல்லி ஊசி போட்டு மருந்து கொடுத்ததாகவும் அதற்கு பின்னர் அவர்கள் வீட்டிற்கு வந்துவிட்டார் வீட்டுக்கு வந்த பின்னர் மேற்படி சம்பவத்தை பற்றி காவல்

கட்டுப்பாட்டு வரை தொலைபேசி எண் 100 க்கு தகவல் சொல்ல அங்கு சென்ற போலீசார் மேற்படி இடத்தில் யாரும் இல்லை என்றும் ஒரே ஒரு இருசக்கர வாகனம் மட்டும் இருந்ததாகவும் அது யார் என்று தெரியவில்லை என்று சொல்லி தாக்கியவர்கள் யார் என்பதை விசாரித்து காலையில் எங்களை அழைப்பதாக சொன்னார்கள். அதற்கு பின்னர் போலிசார் எங்களை அழைக்கவில்லை நாங்களும் இந்த சம்பவத்தை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அதற்குப் பின்னர் மாதவன் என்னுடைய பாட்டி வீட்டை அடித்து உடைத்துஅடித்து உடைத்து விட்டு சென்று விட்டதாகவும் இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுக்க வேண்டாம் என்று அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் சொன்னதால் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும் அதற்கு மறுநாள் என்னுடைய தம்பி கார்த்திக் என்பவர் மாதவன் தகப்பனார் காட்டான் மோகன் என்பவரிடம் ஏன் இவ்வாறு அடித்து நாசம் செய்தீர்கள் என்று கேட்டதற்கு அவ்வாறு பேசிக் கொண்டிருந்த பொழுது என்னுடைய தம்பிக்கும் மோகன் அவர்களுக்கும் வாய் பேச்சு முற்றி தகராறு ஏற்பட்டது என்றும் அந்த நேரத்தில் என்னுடைய மாமா பாலசுப்பிரமணியம் அவர்கள் இருவரையும் சமாதானப்படுத்தி என்னுடைய தம்பியை அழைத்துக் கொண்டு வந்து விட்டார் என்றும் காட்டான் மோகன் என்னுடைய தம்பி கார்த்திக் அவரை அடித்துவிட்டார் என்றும் எனவே அவரை அடித்து அவர் தலை எடுத்துக் கொண்டு வந்த தன்னிடம் காட்ட வேண்டும் என்று மாதவனிடம் சொன்னதாகவும் அதை மனதில் வைத்துக் கொண்டு எல்லாருமே மாதவனும் அவருடைய அப்பாவும், கார்த்திக் என்கின்ற பீஸ்கா கார்த்திக், செந்தில்குமார் சரவணன் மற்றும் சத்யநாராயணன் ஆகியோர் என்னுடைய தம்பி கார்த்திக்கை சுடுகாட்டிற்கு வரவழைத்து வெளிப்பக்கமாக கேட்டை பூட்டி காட்டான் மோகன் ஐ பாதுகாப்பாக கேட்டிற்கு பொறுப்பாக நிறுத்திவிட்டு மற்ற அனைவரும் சேர்ந்து என்னுடைய தம்பியை கொன்று விட்டதாகவும் மாதவன் என்னுடைய தம்பியின் தலையை வெட்டி சிதைத்ததாகவும் மாதவனுடைய தகப்பனாரை அடித்ததை தவிர எங்களுக்கு வேறு யாரிடமும் பகை இல்லாத காரணத்தினால் என்னுடைய தம்பி மாதவன் என்னுடைய தம்பியை சுடுகாட்டிற்கு அழைக்கின்றார் என்று என்னிடம் சொன்ன பொழுது நான் போக வேண்டாம் என்று தடுத்தேன் அதையும் மீறி சென்றதாலே இந்த சம்பவம் நடந்தது என்று சொல்கின்றார். நான் மருத்துவமனையில் இருந்து நேரடியாக K1 செம்பியம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். காட்டப்படும் புகார் என்னால் கொடுக்கப்பட்டது தான். புகார் ல் உள்ள கையொப்பம் என்னுடையது. அதில் உள்ள விவரங்களை அங்கு கும்பலாக இருந்தவர்களில் எனக்கு தெரிந்த ஒரு நபர் நான் சொல்ல சொல்ல எனக்கு எழுதிக் கொடுத்தார் அதில் நான் கையொப்பம் மட்டும் போட்டேன். அந்த புகார் அ.த.சா.ஆ.1. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

1 மற்றும் 4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடைய புகாரில் என்னுடைய விலாசமாக நம்பர் 5, சர்மா நகர் குடியிருப்பு, வியாசர்பாடி என்று குறிப்பிட்டு இருக்கின்றேன் என்று சொன்னால் சரிதான். அதே போல என்னுடைய அம்மா உஷாராணி என்பவர் என்னுடைய சகோதரி ரேவதி என்பவருடைய வீட்டில் வசித்து வருவதாகவும் அவருடைய விலாசம் நம்பர் 9, சர்மா நகர் குடியிருப்பு, வியாசர்பாடி என்று குறிப்பிட்டு இருக்கின்றேன் என்று சொன்னால் சரிதான். அதுமட்டுமல்லாமல் எனக்கு பிவி காலனி, 29 வது தெருவில் கதவிலக்கம் 984 இல் ஒரு வீடு இருப்பதாக சொல்லி இருக்கின்றேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி வீட்டில் யார் குடியிருக்கின்றார்கள் என்ற விவரத்தை நான் என்னுடைய புகாரில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி புகாரில் என்னுடைய தகப்பனார் 2010 இறந்து விட்டதாக சொல்லி இருக்கின்றேன் என்று சொன்னால் சரிதான். பிவி காலனி இருக்கின்ற சொத்து சம்பந்தமாக என்னுடைய சகோதர சகோதரிகளுக்கு இடையே சொத்து தகராறு இருப்பதாக சொல்லி இருக்கின்றேன் என்று சொன்னால் சரிதான். நான் பர்மா பஜாரில் கைபேசி விற்பனை செய்யும் கடை வைத்திருக்கின்றேன் என்று சொன்னால் சரிதான். பிவி ரோடு சுடுகாடும் செம்பியம் காவல் நிலையமும் பர்மா பஜாரில் உள்ள என்னுடைய கடையும் ரொம்ப தூரத்தில் இல்லை என்று சொன்னால் குறிப்பாக தூரம் எவ்வளவு என்று எனக்கு தெரியவில்லை என்று சாட்சி கூறுகின்றார். மேற்படி தூரம் சுமார் ஐந்து கிலோ மீட்டர் கூட இருக்காது என்று சொன்னால் அதைப்பற்றி தனக்கு தெரியவில்லை என்று சாட்சி கூறுகின்றார். இருசக்கர வாகனத்தில் பி.வி ரோடு சுடுகாட்டிற்கு பர்மா பஜாரில் இருந்து சென்றால் 15 நிமிடத்திலேயே சென்று விடலாம் என்று சொன்னால் அது சரி அல்ல. அவ்வளவு வேகமாக இருசக்கர வாகனத்தை ஓட்டுவது கிடையாது என்று சாட்சி கூறுகின்றனர். எனக்கு செம்பியம் போலீசார் 14.9.2022 அன்று தகவல் சொன்ன பொழுது இறந்து போனவருடைய பிரேதம் கே. எம்.சி மருத்துவமனை சவக்கிடங்கில் இருப்பதாக தெரிவித்து விட்டார்கள் என்று சொன்னால் இல்லை என்று சாட்சி கூறுகின்றார். மீண்டும் சாட்சி புகாரில் உள்ள விவரங்களை பார்வையிட்டு அவ்வாறு குறிப்பிட்டிருப்பதாக ஒத்துக் கொள்ளுகிறார். என்னுடைய தம்பியின் கைபேசியையும் என்னுடைய கைப்பேசியையும் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்த பொழுது போலீசார் கைப்பற்றினார்கள் என்று சொன்னால் என்று சொன்னால் அது சரியல்ல. என்னுடைய கைப்பேசியை யாரும் கைப்பற்றவில்லை என்று சாட்சி கூறுகின்றார். என்னுடைய தம்பி பயன்படுத்திய கைபேசி டச் போன் வகையைச் சார்ந்தது எந்த கம்பெனி சார்ந்தது என்று எனக்கு தற்சமயம் தெரியவில்லை. சம்பத்திற்கு முன்பாக மோகன் என்பவர் என்னுடைய பாட்டி

வீட்டின் வாசலில் உட்கார்ந்து மற்ற நபர்களுடன் சேர்ந்து குடித்துக் கொண்டிருந்தார் என்றும் அதை தட்டி கேட்டதால் என்னுடைய அம்மாவை அடித்ததாகவும் அதற்கு மறுநாள் வீட்டை அடித்து உடைத்து நாசம் செய்ததாகவும் என்னுடைய புகாரிலோ அல்லது என்னை விசாரணை செய்த போலீசாரிடமும் நான் சொல்லவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. புகார் எனக்கு எழுதிக் கொடுத்த நபரிடம் மேற்படி விவரங்களை நான் குறிப்பிட்டுச் சொன்னேன் நான் அழுது கொண்டே இருந்ததால் மேற்படி புகாரில் அந்த விவரங்களை அவர் எழுதினாரா இல்லையா என்று தான் பார்க்கவில்லை என்று சாட்சி கூறுகின்றார். என்னுடைய முதல் விசாரணையில் என்னுடைய அம்மாவை தாக்கிய சம்பந்தமாகவும் வீட்டை அடித்து உடைத்தது சம்பந்தமாகவும் என்னால் சொல்லப்பட்ட விபரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பாக தற்சமயம் சொல்லப்பட்ட பொய்யான சங்கதி என்று சொன்னால் அது சரியல்ல. நான் மேலே குறிப்பிட்டபடி சம்பவம் என்னுடைய பாட்டி வீட்டில் நடந்து என்னுடைய அம்மா தாக்கப்பட்டு இருந்தால் உண்மையாகவே புகார் கொடுத்திருப்பேன் என்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு இருக்கும் என்றும் அதுபோல ஒரு சம்பவமே நடக்காத காரணத்தினால் தான் புகார் ஏதும் கொடுக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. காவல் கட்டுப்பாட்டு அரை 100 க்கு அழைத்து நாங்கள் தகவலை சொன்னோம் அந்த பிரச்சினையை மேற்கொண்டு வளர விடாமல் அப்படியே நிறுத்திவிட்டோம் என்று சாட்சி ஏற்கனவே சொல்லி இருக்கின்றார். இந்த வழக்கை நடத்துவதற்கு எனக்கு ஆதரவாக ஒரு வழக்கறிஞரை நியமித்திருக்கின்றேன் என்று சொன்னால் சரிதான். உயர் நீதிமன்றத்திலும் மேற்படி வழக்கை துரிதமாக நடத்த அனுமதி பெற்று இருக்கின்றேன் என்று சொன்னாலும் சரிதான். விவரங்கள் அனைத்தும் உண்மைக்கு மாறாக காவல்துறை மற்றும் என்னுடைய வழக்கறிஞர் ஆலோசனையின் பேரால் சொல்லுகின்றேன் என்று சொன்னால் அது சரியில்லை. நான் இந்த வழக்கு சம்பந்தமாக புகாரில் மட்டும் தான் கையொப்பமிட்டு இருக்கின்றேன். மருத்துவமனையில் இருந்து என்னுடைய தம்பியின் பிரேதத்தை பெற்ற பொழுது ஒரு கையொப்பமும் சுடுகாட்டில் அவருடைய பிரேதத்திற்கு தீமூட்டிய பிறகு கொடுக்கப்பட்ட சான்றிதழில் ஒரு கையொப்பம் போட்டதாக சாட்சி கூறுகின்றார். போலீசார் என்னிடம் ஏராளமான வெற்று தாள்களில் கையொப்பம் பெற்றார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. மேற்படி கையொப்பங்களையும் போலீசார் 16.9.2022 அன்று இரவு 9 மணிக்கு மேல் என்னிடம் பெற்றார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. என்னுடைய தம்பியின் கொலை சம்பந்தமாக எனக்கு எதுவுமே நேரடியாக தெரியாது என்று சொன்னால் அது சரியல்ல. என்னுடைய தம்பியை என்னிடம் நேரடியாக காட்டான் மோகன் என்பவரை அவர் தாக்கி இருப்பதாகவும் மாதவன் அவர்கள் என்னை சுடுகாட்டிற்கு அழைத்ததாகவும் சொல்லி இருக்கின்றேன் என்று சாட்சி சொல்லுகின்றார். மேற்படி விவரங்கள் அனைத்தும் உண்மையாக இருந்தால் புகாரிலேயே சொல்லி இருப்பேன்

என்றும் தற்சமயம் உண்மைக்கு மாறாக மேற்படி விவரங்களை சொல்லுகின்றேன் என்று சொன்னால் அது சரியல்ல. என்னுடைய தம்பி போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர் என்று சொன்னால் அது சரியில்லை. அவர் மது மட்டும்தான் அருந்துவார். என்னுடைய தம்பி கார்த்திக் மற்றும் ராஜ்குமார் மீது காவல் துறையில் நிறைய வழக்குகள் உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. கார்த்திக் மீது எந்த வழக்கும் இல்லை என்று சாட்சி மீண்டும் கூறுகின்றார். என்னுடைய தம்பி கார்த்திக் குடிபோதையில் யாரிடமோ ஏற்படுத்திக் கொண்ட தகராரின் காரணமாகவே அவர் இறப்பு ஏற்பட்டு இருக்கின்றது என்றும் ஆனால் போலீசார் வெற்றுக் காகித்தில் என்னுடைய கையொப்பத்தை பெற்று இந்த வழக்கை எதிரிகள் மீது தவறாக தாக்கல் செய்திருக்கின்றார்கள் என்று சொன்னால் அது சரியில்லை. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கத்திற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் அதுவும் சரியல்ல.

எதிரிகள் A2, A3, A5,A6 ஆகியோர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

*Sd/-K.Geetharani, M.A., M.L.,*

Dt.21.01.2026 III Addl.District Judge.
II Additional District Court(FAC)
City Civil Court, Chennai.